Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

Chundikuli Branch Library

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 12 [28-09-1993] செவ்வாய்க்கிழமை ஓசை 222

## கதிர் வீச்சு தாக்கமுடைய பால்மா இலங்கைக்கு இறக்குமதி

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரு ஆய்வுகளில் கதிர்வீச்சு தாக்கத்திற்குள்ளான பால்மா இரண்டு பிராந்திய நாடுகளிலிருந்து கப்பல் மூலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளமை அறியப்பட்டுள்ளது. மேலும் பழுதடைந்த பால்மாவை பரிசோதிக்கும் நடைமுறையை இன்னமும் இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை என மருத்துவ நிபுணர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதுகுறித்து கருத்துத்தெரிவித்த அணுசக்தி அதிகாரசபை அதிகாரியொருவர் 1980 இல் செர்னோபில் அணுநிலையம் தகர்ந்த சமயத்தில் இறக்குமதியாகும் சகல பொருள்களும் அணுகதிர் வீச்சுக்கு உள்ளானவையா என அதிகாரசபையினர் பரிசோதித்ததாக தெரிவித்தார். எனினும் இச் சோதனை பாரியளவில் தொடர்ந்து மேற்கொள்வதற்கான வசதிகள் இங்கில்லை என்றும் அவர் கூறினார். கதிர்வீச்சு தாக்கத்திற்குள்ளான பழுதடைந்த பால்மாவை (4ஆம் பக்கம் பார்க்க)

# வங்காலையில் கடும் மோதல்; ஆறு சிங்கள படையினர் பலி

## எறிகணை வீச்சு

(தென்மராட்சி)

கிளாலிக் கடல் கரையை நோக்கி பூநகரி சிறிலங்கா முகாமில் இருந்து சனிக்கிழமை இரவு 8.45 மணியளவில் எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது இதன் பின்னர் அப்பகுதியை இரு புக்காரா விமானங்கள் வந்து 15 நிமிடம் சுற்றி நோட்டமிட்டுச் சென்றன.

நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணியளவில் சிறிலங்கா விமானப் படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று கிளாலிக் கடற் கரை (3ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஊரடங்கு

(கொழும்பு)

மன்னாரிலும், முல்லைத்தீவிலும் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு நேற்றுக் காலைமுதல் அமுலாக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கொழும்பில் அறிவித்துள்ளன. இப்பகுதிகளில் முப்படைகளும் தமது கூட்டுநடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

## வட-கிழக்கு ஆயர்கள் பிரச்சினை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

வடகிழக்குப் பகுதிகளின் கிறிஸ்தவ ஆயர்கள் கொழும்பில் சந்தித்து வடகிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்

அண்மையில் கொழும்பில் தங்கியிருந்த மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை, மன்னார் ஆயர் இராயப்பு யோசப் மற்றும் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் சந்தித்து வடகிழக்குப் பகுதிகளின் தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடினர்.

கடந்த மூன்றாண்டுகளாக மேற்படி பகுதிகளில் நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக இப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், இப்பாதிப்புகள் காரணமாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இம்மூன்று ஆயர்களும் தமக்கிடையே பேச்சுவார்த்தை நடாத்தினர். ஒவ்வொருவரும் தமது பகுதிகளின் நிலைமைகள் குறித்து பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

(ஈ), (நி)

## புதிய நடவடிக்கை ஆரம்பமென பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

[மன்னார்]

மன்னார் மாவட்டம் வங்காலையில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட இரு வெவ்வேறு மோதல்களில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். காலையில் நடைபெற்ற தாக்குதலில் ஒரு சிப்பாயும், நண்பகல் இடம்பெற்ற மோதலில் ஐந்து இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாகவும், காலை இடம்பெற்ற தாக்குதலில் ஒரு சிப்பாயின் ஆயுதங்களும் ரவைகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலாவது தாக்குதல் நேற்றுக்காலை 7.00 மணியளவில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்டது. வங்காலை இராணுவ முகாமின் காவலரை

போர் காயங்களுடன் முகாமிற்குத் தப்பியோடி விட்டனர்.

விடுதலைப் புலிகள் நடத்திய இத் தாக்குதலின்போது இராணுவத்தினரிடமிருந்து: ரி 56-1 ரகதுப்பாக்கி - 01, (3ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழபொதுக்கல்விதேர்வு இன்று ஆரம்பமாகிறது

### நேர அட்டவணையில் சிறு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு பரீட்சை வடமாகாணம் முழுவதும் திட்டமிட்டபடி இன்று ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள 131 தேர்வு நிலையங்களில் 15631 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

மேற்படி பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் 99 தேர்வு நிலையங்களில் 11952 பேரும் கிளிநொச்சியில் 15 தேர்வு நிலையங்களில் 1360 பேரும் முல்லைத்தீவில் 7 தேர்வு நிலையங்களில் 1078 பேரும் வவுனியாவில் 6 தேர்வு நிலையங்களில் 645 பேரும் மன்னாரில் 4 தேர்வு நிலையங்களில் 596 [4ஆம் பக்கம் பார்க்க)

## இரவில் நடமாட ஜனாதிபதிக்கு தடை

## பல்கலை. கல்வியாண்டு ஒக்டோபரில் ஆரம்பம்

## ஒக்டோபரில் ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக கலைபீடத்திற்கான புதிய கல்வியாண்டு ஒக்டோபர் 11 ஆம் திகதி ஆரம்பமாகிறது. முதலாவது ஆண்டில் அனுமதி பெறுவோர் குறித்த பெயர்ப் பட்டியல் இதுவரை கிடைக்காமையால் 2, 3, 4 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகளே அன்று ஆரம்பமாகும் எனினும் நுண்கலைப் பீடத்தின் சகல ஆண்டு மாணவர்களிற்கான விரிவுரை அன்று ஆரம்பமாகும்.

இதேவேளை மருத்துவ பீடத்திற்கான புதிய கல்வியாண்டு ஒக்டோபர் 4 ஆம் திகதியும் விஞ்ஞான பீடத்திற்கு டிசெம்பர் 6ம் திகதியும் ஆரம்பமாகவுள்ளது.

விவசாய பீடத்திற்கான புதிய கல்வியாண்டு திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

## தென்மராட்சி பகுதியில் 'கொலரா' குறித்து எச்சரிக்கை

(தென்மராட்சி)

கைதடி ரயர் கம்பனி அகதி முகாமிலிருந்து 'கொலரா' நோயினால் பாதிக்கப்பட்ட 8 பேர் சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மண்டிதர் குடியிருப்பிலிருந்து நேற்று மாலைவரை 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந் நோய் தென்மராட்சிப் பகுதியில் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதையடுத்து இது குறித்து எச்சரிக்கைகள் பொது ஸ்தாபனங்களால் தென்மராட்சிப் பகுதி எங்கும் ஒலிபெருக்கி மூலம் விடுக்கப்படுகின்றது. (86)

## மண்ணெய் விநியோகம்; இன்று ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படவுள்ள மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று நண்பகல் 2.00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவற்றை குறித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையே ஒதுக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளுக்கேற்ப பங்கீடு மற்றும் விநியோகம் செய்வது தொடர்பாக நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடலுக்கு சகல பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

இராணுவ முகாமின் காவலரணிலிருந்து 200 யார் தொலைவில் போடப்பட்டிருந்த தடைகளை அகற்றும் நோக்குடன் ஏழு இராணுவத்தினர் வெளியேறி வந்தபோதே இத் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் நடத்திய இத் தாக்குதலால் ஒரு சிப்பாய் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். ஏனை

## பரப்புக் கடந்தான் பகுதியில் விமான குண்டு தாக்குதல்

(மன்னார்)

பரப்புக் கடந்தான் காட்டுப் பகுதிகள் மீது சிறிலங்கா விமானப்படையின் புக்காரா விமானங்கள் நேற்றுக் காலை அகோர குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

மன்னார் மாவட்டத்திலுள்ள பரப்புக் கடந்தான் காட்டுப் பகுதிக்கு நேற்றுக் காலை 11 மணியளவில் வந்த இரு புக்காரா விமானங்கள் பல தடவைகள் வட்டமிட்டு குண்டு வீச்சு தாக்குதல்களை மேற்கொண்டன.

# கிளாலி, ஆலங்கேணியில் அகோர குண்டு வீச்சு

[தென்மராட்சி]

கிளாலி அல்லிப்பளை இறங்குதுறைப் பகுதியிலும் ஆலங்கேணிப் பகுதியிலும் சிறிலங்கா விமானப்படை புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் அகோர குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்திவருகின்றன.

மேலும் உலங்கு வானூர்திகளும் 50 கலிபர் தாக்குதலை நடாத்தியுள்ளன.

இரவு 7.15 மணி தொடக்கம் இக் குண்டு வீச்சு தாக்குதல்கள் நடைபெற்று வருகிறது. இவ் இருபகுதிகளிலும் தாக்குதல்கள் தொடர்வதாகவும் மேலும் தெரியவருகிறது.

இதேவேளை பூநகரி முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. [86]

# யுத்தத்தின் அரசியல் நோக்கம்; படையினர் மத்தியில் குழப்பம்

### சண்டே ரைம்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒவ்வொரு யுத்தத்திற்கும் இராணுவ நோக்கும் அரசியல் நோக்கும் உள்ளது என்பதை அனைத்து யுத்த வரலாறுகளும் நிரூபித்துள்ளன. ஆனால் இங்கு நடைபெறும் நீண்ட யுத்தத்தின் இராணுவ நோக்கம் குறித்து ஒவ்வொரு சிப்பாய்களும் அதிகாரிகளும் நன்கறிந்துள்ளனர். யுத்தத்தின் அரசியல் நோக்கம் குறித்து அவர்கள் குழம்பிய நிலையில் உள்ளனர்.

இவ்வாறு பிரிகேடியர் சரத் விக்கிரமரட்ண 'நோக்கமற்ற யுத்தகளமற்ற போர்' என்ற தலைப்பில் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று வருடங்களாக களத்தில் போரிட்ட இராணுவ அதிகாரிகள் விடுமுறையில் நின்றுவிட்டு பணிக்கு திரும்பும் சமயத்தில் தாம் அவர்களை சந்தித்தபோது அவர்கள் மேற்கூறிய கருத்தை கொண்டிருந்

(3ஆம் பக்கம் பார்க்க)

## ...ஜனாதிபதிக்கு ஆலோசனை

[கொழும்பு]

மாலை 6 மணிக்கு பின்னர் பொது வைபவங்களில் கலந்து கொள்ள வேண்டாம் என ஜனாதிபதியின் பாதுகாப்பு கமிட்டி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

ஜனாதிபதிக்கு கொலை மிரட்டல் வந்துள்ளதை தொடர்ந்து மேற்படி ஆலோசனையை ஜனாதிபதியின் பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது. அத்துடன் பொது வைபவங்களையும், மக்கள் அதிகளவில் கலந்து கொள்ளும் வைபவங்களையும், நீண்ட காலம் திட்டமிட்ட வைபவங்களையும், இயலுமான வரையில் தவிர்த்துக் கொள்ளுமாறும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஜனாதிபதி செல்லும் இடங்களில் மிகுந்த அவதானமாக இருக்குமாறு மெய் பாதுகாப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## 2000 மெ. தொன் அரிசியுடன் குமாரி வந்தடைந்தது

பருத்தித்துறை இறங்கு துறைக்கு காங்கேசன் துறையில் தரித்து நின்ற மரினாவ் கப்பல் நேற்றுக் காலை வந்தடைந்தது. இக்கப்பலில் 615 மெற்றிக் தொன் மா எடுத்து வரப்பட்டது.

கொழும்பில் இருந்து புறப்பட்ட 'குமாரி' கப்பலும் நேற்று பகல் 12.30 மணியளவில் வந்து சேர்ந்தது. இக் கப்பலில் அரிசி 2ஆயிரத்து 27 மெற்றிக் தொன், பயறு உழுந்து, மிளகு 52 மெற்றிக் தொன், சீனி 900 மெற்றிக் தொன், மல்லி, பெருஞ்சீரகம், வெந்தயம், 23 மெற்றிக் தொன், ஹய்லாண்ட் மா பைக்கற் 7 ஆயிரத்து 500 பைக்கற்றுக்கள், சிறுவர் பராமரிப்பு நிறுவனத்திற்கு 249 பரல் தேங்காய் எண்ணெய் மற்றும் பொருள்களும் எடுத்துவரப்பட்டன. (யோ)

## திருமலை மாவட்டத்தில் திலீபன் நினைவு நிகழ்வு

(நமது நிருபர்)

சிறிலங்கா இராணுவ அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் திருமலையில் தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் மக்களால் மிகவும் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

திருமலை மாவட்டம் வெருகல் பிரதேசத்திலுள்ள வெருகல் முருகன் ஆலயத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அப்பகுதிகளிலுள்ள சகல ஆலயங்களிலும் திலீபனின் ஆத்ம சாந்திக்காக விசேட பூசைகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி வடக்கில் கடற்படை, ஹெலி தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதி குடியிருப்புக்கள் மீது இருமுனைத் தாக்குதல்கள் நேற்று அதிகாலை முதல் நடைபெற்றன.

இக் கரையோரப் பகுதிக்கு அதிகாலை 3 மணிக்கு வந்த கடற்படைப் படகுகள் உலங்கு வானூர்தி ஆகியன பாரிய கடும் தாக்குதலை குடியிருப்புக்கள் மீது மேற்கொண்டன. எனினும் பாரிய சேதங்கள் ஏற்பட்டதாக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

கடலில் சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான 'டோறா' விசைப்படகுகள் தரித்துநின்று குடியிருப்புக்கள் மீது கடும் தாக்குதலை தொடுத்தன. அதிகாலை அப்பகுதிக்கு திடீரென வந்த உலங்கு வானூர்தி ஒன்று ஒரு தடவை வட்டமிட்டு நோட்டமிட்டது. பின்னர் கடற்படைப்படகு நின்ற திசையை நோக்கிச் சென்று திரும்பி வந்ததும் கண்மூடித்தனமாக குடியிருப்புக்கள் மீதும் கடலில் மீனவர்கள் மீதும் தாக்குதலை ஆரம்பித்தது.

காலை 6 மணிவரை உலங்கு வானூர்தி தொடர்ச்சியாக வெளிச்சம் போட்ட நிலையில் தாக்கிக் கொண்டிருந்தது. அதே சமயம் கடற்படைப் படகுகளும் மாறி மாறித் தாக்கத் தொடங்கின. கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் கடலில் குதித்து கரையை வந்தடைந்தனர்.

மேலும் 9-30 மணியளவில்

(4ஆம் பக்கம் பார்க்க)

---

## இன்று படகுச் சேவை

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

---

# ஓய்வுபெற்ற அதிகாரிகளை இராணுவத்தில் இணைக்க முயற்சி

[கொழும்பு]

வடக்குக் கிழக்கு யுத்தத்திற்கு பயன்படுத்துவதற்கு ஓய்வு பெற்ற அல்லது சேவையிலிருந்து விலகிய இராணுவ உயர் அதிகாரிகளின் சேவை பெறப்படும் என இராணுவ உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களை சேவைக்கு அமர்த்தும் பொழுது சேவை நீடிப்பு என்ற அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவதா? அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவதா? என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அரசாங்க உயர்வட்டாரங்களில் இது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகவும் இராணுவ உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

### க.பொ.த (உயர்தர) பரீட்சை

## வினாத்தாள்களை திருத்த தமிழ் உத்தியோகத்தர் இல்லை

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் பணிக்கு தமிழ் உத்தியோகத்தர்கள் அமர்த்தப்படாமையால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி விடைத்தாள்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**நுளம்புத் தொல்லையா?**

நமக்கில்லை. நுளம்புத் தொல்லை. நாம் இரவில் ''நீப் தூபம்'' புகைத்து நிம்மதியாகத் தூங்கிறோம்.

பக்கற் ஒன்று ரூ 3/- மட்டுமே. 25 பக்கற் கொண்ட அட்டை ரூ 60/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. ''மின்னல்''

[சி/7497]


### சிரித்திரன் வெளிவந்துவிட்டது

ஆடி-ஆவணி மாதத்திற்குரிய சிரித்திரன் வெளிவந்துவிட்டது-

இவ்விதழில் நிலைக்கண்ணாடி, பிருந்தாவனம், மகுடி-பதில் மெயில்வாகனத்தார் மனோரதம், சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்ற ஈழமுத்து எழுதிய 'கவிஞனின் மகள்' எனும் சிறுகதை, பிரம்மபுத்திரா எழுதிய விடர்வையின் வெற்றி, சிரித்திரன் சிக்கல் போட்டி மற்றும் பல அம்சங்களுடன் இவ்விதழ் வெளிவந்துவிட்டது.

### விளையாட்டு மைதானம் நிர்மாணிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் சுமார் 1½ இலட்சம் ரூபா செலவில் பொது விளையாட்டுமைதானம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது பருத்தித்துறை பிரதேசசபையின் செயலகப் பிரிவின் உப அலுவலகப் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்றே இப்பொது விளையாட்டுமைதானம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் பொது விளையாட்டு மை

## அண்மையில் மரத்திலிருந்து வீழ்வோர் தொகை அதிகரிப்பு

### நாவல் பழத்தினால் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

நாவல் மரத்திலிருந்து விழுந்து எலும்புகள் முறிவுற்ற நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அண்மைக்காலத்தில் கணிசமாக அதிகரித்திருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

தற்போது நாவல் மரங்களில் பழம் நிறைந்திருக்கும்காலமாதலால் பழம் பிடுங்குவதற்காக ஏறுவோரில் பலர் தவறி விழுந்து படுகாயமடைவதாகவும், இத்தகையோரின் தொகை நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய நோயாளர்களின் தொகை அதிகரிப்பால் முறிவு நோய் சிகிச்சைப் பிரிவில் இடநெருக்கடி பெருமளவில் ஏற்பட்டிருப்பதோடு முறிவு, காயம் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியிருப்பதாகக் கூறப்படுகிறது.

(சி)


உ

**செல்வி பரமேஸ்வரி கணேசன்**

அவர்களின்

## இசை அரங்கேற்றம்

இளங்கலைஞர் மன்ற கலாமண்டபம்

சட்டநாதர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்

**29-09-1993 புதன்**

மாலை 4.0 மணி

1. மங்கள விளக்கேற்றல்:
   திரு. K. சோமசுந்தரம்
   (மகாராணி புடவை மாளிகை)
   திரு. V. K. பஞ்சமூர்த்தி
   (நாதஸ்வர வித்துவான்)
2. ஆசியுரை:
   சங்கீத பூஷணம் S கணபதிப்பிள்ளை
   (உதவிக் கல்விப் பணிப்பாளர் - சங்கீதம்)
3. தலைமையுரை:
   திரு. T சிவகுமாரன்
   (தலைவர், நாவரநகர் கம்பன் கழகம்)
4. சிறப்பு விருந்தினர்:
   பேராசிரியர் அ சண்முகதாஸ்
   (தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
5. இசை மதிப்புரை:



## 90-ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
26-08-1977

ஆண்டவன் அடியில்
01-07-1993

**செல்வகிருஷ்ணன் சதீஸ்காந்**

(யா/உடுத்துறை ம. வி. 11-ம் ஆண்டு மாணவன்)

நாட்கள் தொண்ணூறுகளில்
எம்மை ஆழாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட சதீஸ்
நீ மறையவில்லையடா
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்.

நின் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

உடுத்துறை தெற்கு,
தாளையடி.
(6067)

அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.



## ஒரு வருட நினைவஞ்சலி





## புனருத்தாரணக் கூட்டம்

காலம்: 02-10-93 மாலை 4 மணிக்கு

இடம்: அன்னசத்திர மண்டபம்


கடையிற்சுவாமிகள் குருவார அன்னசத்திரம்,
இல: 204, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

மேற்படி கூட்டம் இவ்வாலய புனர் அமைப்புத் தொடர்பாக விசேடமாக ஆராயப்பட்டு அதற்கான புனருத்தாரண குழு தெரிவும இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

[6117] அமைப்புக்குழு



## அணைந்த தீபத்தின் 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருஞானசம்பந்தர் சிவநாதன்**

அன்னை மடியில்: 17-09-1963

ஆண்டவன் அடியில்: 12-10-1989

பொது விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் பொது விளையாட்டு மைதானம் ஒன்றில்லாதது இம் மக்களுக்குப் பெருங் குறைபாடாக இருந்து வந்துள்ளது. (25)

### இலவச செவிப்பன்னி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாண கல்விப் பிரதேசத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் காது கேளாத மாணவர்களுக்கு இலவச செவிப்பன்னி Hearing Ald) வழங்க யாழ் பிரதேச கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (17)

---

பேராசிரியர் அ சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

5 இசை மதிப்புரை:
சங்கீத பூஷணம் S பாலசிங்கம்
(இளைப்பாறிய இசையாசிரியர்)

6 நன்றியுரை:

அரங்கிசை:
செல்வி பரமேஸ்வரி கணேசன் — பாட்டு
செல்வன் S கோபிதாஸ் — வயலின்
செல்வன் K. கண்ணதாசன் — மிருதங்கம்
செல்வன் S நாகராஜன் — கஞ்சிரா

அன்புடன் அழைக்கின்றோம்.

மருதடி.
காரைநகர்.

திரு. S. மந்திரமூர்த்தி
(நாதஸ்வரம்)

(சி-7468)

---

உ
ஸ்ரீராம ஜயம்

### ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

யாழ்/வடமராட்சி, துன்னாலை வடக்கு பருத்தித்துறை.

## விசேட உற்சவ நிகழ்ச்சிகள்

சப்பறம் **28-09-93** செவ்வாய்க்கிழமை மாலை 8 00 மணி

இசைச் சொற்பொழிவு ※ மானம் காத்தகண்ணன் ※
நல்லைகுருமணியின் பிரதமசீடன் கலைகதாவாரிதி முத்தமிழ் மாமணி இராமாயண கதா திலகம், சந்நிதிமடம்
பிரம்மஸ்ரீ சிவ வை நித்தியானந்தசர்மா, ஆசிரியர்

தேர்த்திருவிழா **29-09-93** புதன்கிழமை முற்பகல் 11.00 மணி
இன்னிசைக் கச்சேரி ஞானபண்டித இசையரசு சங்கீத பூஷணம் S குமாரசாமி
பி ப 4 30 மணி சொற்பொழிவு ❀ இருவேடர்கள் ❀
திரு எஸ்.சிவலிங்கராசா (முதுநிலை விரிவுரையாளர் தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்)
பி. ப 5 30 மணி சொற்பொழிவு ❀ ஆழ்வார் பிரபத்தி ❀
திரு வை கா சிவப்பிரகாசம், அதிபர் (கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

சமுத்திரதீர்த்தம் **30-09-93** வியாழன் பி. ப 7 00 மணி
சொற்பொழிவு ❀ திருமாலின் அவதாரம் ❀
ப கோபாலகிருஷ்ணஐயர் (தலைவர்-இந்து நாகரிகத்துறை யாழ் பல்கலைக்கழகம்)
கலாநிதி காரை செ சுந்தரம்பிள்ளை (விரிவுரையாளர்-கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
❀ பார்க்குமிடமெல்லாம் அவன் தோற்றம் ❀
திரு. சோ பத்மநாதன் (உ அதிபர் பலாலி ஆசிரியர் கலாசாலை)
❀ பள்ளி கொண்ட பெருமான் ❀
திரு எஸ் சிவலிங்கராசா (முதுநிலை விரிவுரையாளர் தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்)
❀ கார்க்கோலமேனியான் ❀
**திரு. இ. ஜெயராஜ், அமைப்பாளர் கம்பன்கழகம்.**
❀ அன்னவர்க்கே சரண் ❀

பட்டுத்தீர்த்தம் **01-10 93** வெள்ளிக்கிழமை மாலை 3 00 மணி
திரு த கலாமணி (விரிவுரையாளர் கல்வித்துறை யாழ் பல்கலைக்கழகம்)
❀ நடந்த கால்கள் நொந்தவோ ❀
திரு. வை. கா. சிவப்பிரகாசம் (அதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
❀ ஞானச்சுடர் ❀

- தேவஸ்தான தர்மகர்த்தா சபை.

(சி-7501)

---



திருமதி

### அன்னலட்சுமி கந்தையா

திதி: 28-09 1993

ஆண்டொன்று போனாலும் அன்னையே!
எண்ணத்தில் உம் நினைவு மாறாது - மண்ணில்
அழுவதால் தீராத, ஆறாத சோகமிது நாம்
வாழும் வரையில் வாழ்வீர்கள் தாயே!

'லக்ஷ்மி வாசம்',
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

அன்புப்பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[6090]

---

## 1-ம் ஆண்டுநினைவலைகள்



மலர்வு:
01-04-1974

வீரச்சாவு:
28-09-1992

### லெப். கோமகன்

[பிலிப் பிறேமானந்தன் (கலீஷ்)]

(மணலாறில் சிறிலங்கா படையினருடனான சமரில் வீரச்சாவெய்தியவர்)

எமது நிலையுணர்ந்தாய் தாயகத்தின் விடிவிற்காய்
தாயன்பைத் துறந்து உலகு புகழ் புலிகளின்
பாசறையை நேசமுடன் சென்றடைந்து தீரமுறச்
செருக்கலை பயின்று, புலிகளின் தாகமாம்—தமிழீழம்
பெறுதற்காய் மணலாறு,
முதலாக மாமிகுளம் இடையாக
வெற்றிலைக் கேணியுடன் ஆனையிறவையுஞ் சேர்த்து
இதயபூமியாம் மணலாற்றில்
சிங்களப் படையுடன் சமரிட்டு
இறுதியிலே இன்னுயிர் ஈந்த
காவலனே! மாவீரா! கோமகனே!
உன்னாசை நிறைவேற
புலிமறவர், பிரபாவின் ஆணையேற்பர்
தரங்கெட்ட சிங்களப் படைதன்னை
திடமாகத் துரத்திடுவர்; தாயின் விலங்கொடித்து,
தரணியிலே தமிழீழம் நிலையாகச் சமைத்திடுவர்.

உன் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்
சித்திமார், உடன்பிறப்புக்கள்,
சித்தப்பாமார், அண்ணாமார்
மற்றும் உறவினர், நண்பர்கள்.

சந்தா தோட்டம்,
பருத்தித்துறை.

(6104)

---

### திருஞானசம்பந்தர் சிவநாதன்

அன்னை மடியில்:
17-09-1963

ஆண்டவன் அடியில்:
12-10-1989

திதி: 28-09-1993

நீங்கா நினைவுகளை
நீ எமக்கு தந்துவிட்டு
நீண்ட தூரம் சென்றாலும் - உன்
நினைவு என்றென்றும்
நிலைத்திருக்கும் எம்மனதில்.

- குடும்பத்தினர்

கொக்குவில் மேற்கு.

(சி- 7489)

---

## நினைவு கூருகின்றோம் ...

## 1993. 09. 28

1988ஆம் ஆண்டு கிளிநொச்சி - வட்டக்கச்சிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த-

**கிட்டு** (மயில்வாகனம் கிருஷ்ணதாஸ் - திருவையாறு - கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு தீவகம், மண்கும்பான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**ரமேஸ்** (இரத்தினம் சத்தியராஜ் - வானம்பாடி, காரைநகர் - யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 02 இளைஞர்கள் உட்பட வந்தாறு, செங்கலடி - 02, மயிலம்பாவெளி, ஐயங்கேணி பகுதிகளைச் சேர்ந்த 08 தமிழர்கள். எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன். வாழைச்சேனைப் பகுதியில் முஸ்லிம் காடையர் கும்பலொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தமிழிளைஞன்.

தமிழீழக்கடற்பரப்பில் (யாழ் - கல்முனை) தொழிலுக்குச் சென்ற சமயம் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சடலமாக கரை ஒதுங்கிய கடற்றொழிலாளி மற்றும் இவருடன் சென்று காணாமல் போன சிறுவன் ஆகிய 02 தமிழர்கள். தீவகப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வேலணை மண்கும்பானைச் சேர்ந்த இளைஞன்.

1992ஆம் ஆண்டு மணலாறு - கொக்குத்தொடுவாய் பகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் மீது தாக்குதல் நடத்திய போது வீரச்சாவெய்திய-

**லெப். தேவநேயன்/குருசாமி** (மயில்வாகனம் சந்திரகுமார் - களுதாவளை - மட்டு)

**2-ம் லெப். வெற்றிவேல்/நீயா** (கதிர்வேல் ராமச்சந்திரன் - வாழைச்சேனை - மட்டு)

**கப்டன் திருமையான்/டேவிட்** (பாலகிருஷ்ணன் டேவிற் ஜெந்திரன் - திருமலை)

**2-ம் லெப். இளம்பிறை/ஞானம்** (பாக்கியராசா ரவி - மூதூர் - திருமலை)

**லெப். கோமகன்/கலீஸ்** [பிலிப்பையா பிறேமானந்தன் - சந்தாதோட்டம் - பருத்தித்துறை]

கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் மீது ஊறிஞ்சாத் தீவு காவலரணில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது காணாமற் போன 04 பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்.**

(சி-7500)

சிந்தனைக்கு

நிமிர்ந்து நிற்பதாய் எண்ணுபவன்
எச்சரிக்கையாய் இருக்கட்டும்,
அவன் விழுந்து விடாமல் இருக்கும் பொருட்டு.

— புனிதர் பவுல் [விவிலியம்]

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## அச்சம் தீரவில்லை

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சினுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் இருந்த முரண்பாடு கடந்த 21ஆம் திகதி பாராளுமன்றக் கலைப்புடன் பெரும் நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளது. இந்நெருக்கடி நிலையானது ஒரு சிவில் யுத்தம் வரையும் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சினுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் எழுந்த இம் முரண்பாடு சடுதியாக ஏற்பட்டதொன்றல்ல. யெல்ட்சின் பதவி ஏற்ற காலத்தில் இருந்தே இம்முரண்பாடு இருந்து வருகின்றது. யெல்ட்சின் கடைப்பிடிக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கைகளையும், அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளையும் எதிர்க்கும் ரஷ்ய பாராளுமன்ற உறுப்பினர் யெல்ட்சினின் நடவடிக்கையை வெகுவாக விமர்சிப்பதோடு அவர் சர்வாதிகாரப் போக்கில் செல்வதாகவும் குற்றம்சாட்டுகின்றனர். யெல்ட்சினோ ஜனநாயகத்திற்கும், சீர்திருத்தங்களுக்கும் பாராளுமன்றம் தடையாக உள்ளதாகக் குற்றம் சாட்டி வருகின்றார்.

இந்நிலையில்தான், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாகவும், டிசம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி யெல்ட்சின் அறிவித்ததை தொடர்ந்து அரசியல் நெருக்கடி தீவிரமாகியுள்ளது. யெல்ட்சினின் இந்நடவடிக்கைக்கு ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் குறிப்பிடத்தக்க ஆதரவு இருப்பினும் பிராந்தியங்களில் பெரும்பாலானவை அதை எதிர்த்துள்ளன. அவை யெல்ட்சினின் நடவடிக்கை அரசியலமைப்பிற்கு முரணானது எனத் தெரிவித்ததோடு, அதிபர் யெல்ட்சின் பாராளுமன்றத்தைக் கலைக்கும் உத்தரவை வாபஸ் பெற வேண்டும் என எச்சரிக்கையும் விடுத்துள்ளன.

இவ்வாறான நெருக்கடி நிலையில், எரியும் நெருப்பிற்கு எண்ணெய் வார்க்கும் நடவடிக்கையில் மேற்கு நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் யப்பான் போன்ற நாடுகள் இறங்கியுள்ளன. இந்நாடுகள், ரஷ்யாவின் உள்விவகாரம் என்பதை மறந்து ஜனாதிபதி

# தேசிய இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது

### -குமார் ரூபசிங்க

(கொழும்பு)

இராணுவத் தீர்வினால் இரு தரப்பினருக்கும் அழிவுகளும் இழப்புகளுமே ஏற்படும். மேலும் தேசிய இனப் பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையாக மட்டுப்படுத்தினால் நாம் உண்மையாகவே செய்வது எமது மக்களை ஒடுக்குவதேயாகும். இது எமது அனுபவத்திலும் உண்மையாகவே இருக்கிறது. இவ்வாறு சர்வதேச விழிப்பு இயக்கம் எனப்படும் இன்டர்நஷனல் அலட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்களில் ஒருவரான கலாநிதி குமார் ரூபசிங்க பி.பி.ஸியின் சந்தேசியசேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் பத்து வருட காலத்தில் இருந்த இரு ஜனாதிபதிகளும் இது தேசிய இனப் பிரச்சினை என்பதை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இது தொடர்பாக சர்வதேச மட்டத்திலும், சிறிலங்கா பாராளுமன்றத்திலும் கூட கருத்து தெரிவித்துள்ளார்கள். தேசிய இனப் பிரச்சினை என்பதனாலேயே இந்திய அரசுடன் சேர்ந்து இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கினார் ஒரு ஜனாதிபதி. மற்றவரோ பதினான்கு மாத காலம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தினார். இராணுவத் தீர்வு என்பது சமாதானத் தீர்வு ஒன்றிற்கு வர இடம் கொடுக்க மாட்டாது. இப்படியான ஒடுக்கு முறைகளினால் நாம் ஒரு இனத்தையே முழுமையாக பயங்கரவாதிகளாக்குவதாகவே முடியும் எனத் தெரிவித்தார். அத்துடன் பெரும்பான்மையான மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை சிலரின் வற்புறுத்தலின் பேரிலேயே யுத்தம் நடைபெறுகின்றது என்பது மட்டுமே உண்மையாகும். எனவே மக்கள் எல்லோரும் முன்வந்து இப் பிரச்சினைக்கான சமரசப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் இரு தரப்பினருக்கிடையே தொடர்ந்து யுத்தம் நடைபெற்றால் மூன்றாவது ஒரு நபர் தலையிடுவது தவிர்க்க முடியாதது. இதற்காக நோர்வேயிலுள்ள புத்திஜீவிகள் என்றும் தயாராக இருக்கின்றனர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இப் புத்திஜீவிகள் தலையீடு தொடர்பாக விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்துவிட்டது எனவும் குறிப்பிட்டார்.

## தாண்டிக்குளம் முகாமில் வடபகுதி லொறிகள் தடுப்பு

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட பொருட்களை ஏற்றிக்கொண்டு வடபகுதி சென்ற 10 லொறிகள் தாண்டிகுளம் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா வானொலி தெரிவித்தது.

நேற்று முன்தினம் இந்த லொறிகள் தாண்டிக்குளத்தில் படையினரால் தடுக்கப்பட்டது கடந்தவாரம் கொழும்பில் வடபகுதி செல்லவிருந்த லொறி ஒன்றினுள் என்ஜின் ஒயில் மற்றும் சில தடைசெய்யப்பட்ட பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டதை தொடர்ந்து நடந்த விசாரணைகளை அடுத்தே மேற்படி 10 லொறிகளும் வவுனியாவில் தடுக்கப்பட்டதாக அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

கொழும்பிலுள்ள பிரபல கோடீஸ்வர வர்த்தகருக்கு இந்த லொறி சொந்தமானது எனவும் இவ்வர்த்தகர் தற்போது தலைமறைவாகி விட்டார் எனவும் இவரது கொழும்பு வர்த்தக நிறுவனம் சீல் வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

### குடியிருப்புக்கு கொட்டகைகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சாம்சன் குடியிருப்பில் தங்கியுள்ள திவகத்தைச் சேர்ந்த 244 குடும்பங்களுக்குமென 14 பெரிய கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒரு கொட்டகை 12, 13 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அல்லது இவ்விரண்டாக குடும்பங்கள் அமர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறு இருப்பது பல பிரதிகூலமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியாக ஒவ்வொரு குடிசைகள் அமைத்துத் தரவேண்டும் என மேற்படி குடியிருப்பை நிர்வகித்து வரும் 'சிறுவர் பாதுகாப்பு நிதியத்திடம்' கேட்டிருப்பதாகவும் குடியிருப்பு வாசிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [22]

### விளையாட்டு

அரியாலை சித்தம்பல விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதி நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமையன்று கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கிறிக்கட் இறுதியாட்டத்

பழைய பஸ்நிலையமருகில்

## குற்றுயிராக இருந்தவர் ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

காயமடைந்த நிலையில் யாழ் பழைய பேருந்து நிலையத்துக்கருகில் குற்றுயிராக இடந்த ஒருவர் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தில் மரணமடைந்தார்.

மேற்படிசம்பவம்நேற்றுமுன் தினம் யாழ்.போதனா மருத்துவமனையில் நடந்துள்ளது. இறந்தவருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய விபரம் தெரியவரவில்லை.

... பட்டதாகவும் இவரது மகன் தெரிவித்தார். [சி]

### வவுச்சர்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

செப்டெம்பர் மாத ஒப்பு திய வவுச்சர்கள் ருகுணு வங்கியில் இருந்து இறக்கப்பட்டு விட்டதாகவும் இன்னும் ஓரிரு தினங்களில் அவை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ் அர

## கடன் பெற்றவர்களுக்கு சலுகை மக்கள் வங்கி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் 1967/68-ம் தொடக்கம் கடன் பெற்று மீளச் செலுத்தத் தவறியதன் காரணமாக புதியகடன்களைப் பெறத் தகைமை இழந்த விவசாயிகளுக்கு சலுகை வழங்கப்படவிருப்பதாக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 1978ஆம் ஆண்டுக்குமுன்பாககடன்பெற்றவர்கள்கடனின்முதல் தொகையை மட்டும் 31-03-94க்கு முன்பாக முற்றாகச் செலுத்தினால் வட்டி அறவிடப்பட மாட்டாது என்றும், 78ஆம் ஆண்டு முதல் 86ஆம் ஆண்டுவரை கடன் பெற்றவர்கள் 31-10-93க்குமுன்னர் முதல்தொகையை செலுத்தினால் 90 சதவீத வட்டிக் கழிவு வழங்கப்படும் என்றும், அத்துடன் புதிய கடன்களைப் பெறுவதற்குதகைமை பெறுவார்கள் என்றும் மக்கள் வங்கியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடைகளுக்குதிடீர் நோய் இறப்பு விகிதம் அதிகரிப்பு

கால்நடைகளுக்கு ஏற்படும் திடீர் நோயினால் தற்போது வவுனியா மாவட்டத்திலே கால்நடைகளின் இறப்பு விகிதம் அதிகரித்துக் கொண்டு வருவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வேளாண்மைப் பகுதியினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

கால்நடைகளின் தொடைப்பகுதி திரட்சியாக வீறைத்துக் காணப்படுவதுடன் வாயால் இரத்தம் கலந்த நுரை வெளியேற 24 மணித்தியாலங்களுக்குள்ளும் சில கால் நடைகள் வயிறு வீங்கி 2 அல்லது 3 மணித்தியாலங்களுக்குள்ளும் இறந்து விடுவதும் இதன் அறிகுறிகளாகத் தென்படுகின்றன.

குறிப்பிட்ட நோயினை இனம் காணும் பொருட்டு மிருக வைத்திய திணைக்கள அதிகாரிகள் நோய் தென்படும் இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திணைக்களத்தை கோரியுள்ளது.

இரட்டைச் சூட்டடுப்பின்

## பயன்பாடு, பாதுகாப்பு விளக்க பிரசுரம் விநியோகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியினரால் அறிமுகப்படுத்தப்பட்டு கட்டிக் கொடுக்கப்பட்டு வரும் இரட்டைச் சூட்டடுப்பினைக் கட்டுவித்து வரும் பயனாளிகளுக்குத் தற்போது "இரட்டைச் சூட்டடுப்பில் உச்சப் பயன் பெறலும், அதனைப் பாதுகாப்பாக வைத்திருத்தலும்' எனும் விடயத்தினை உள்ளடக்கிய சிறு பிரசுரம் ஒன்று வழங்கப்பட்டு வருகிறது.

அடுப்பினைக் கட்டுவிக்கும் மக்கள் கட்டுபவரிடம் இருந்து இதனைப் பெற்று பயன்படுத்துவதன் மூலம் இரட்டைச் சூட்டடுப்பிலிருந்து முழுமையான பயனைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### கருத்தரங்கு

(குருநகர்)

யாழ். திருமறைக் கலாமன்றம் பிரதான வீதி கேட்போர் கூடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு பயனாட்டு கருத்தரங்கினை ஒழுங்கு செய்துள்ளது.

திரு. கா. கணேசதாசன் "இலக்கியம் காட்டும் பண்பு" பற்றி கருத்துரை வழங்குவார். (21)

யுத்தத்தின்

... ததை நாம் அறியக்கூடியதாக இருந்ததாக பிரிகேடியர் தனது கட்டுரையில் குறிப்பிடுவார். இந்நிலையிலிருந்து விமோசனம் கிடைக்கவேண்டுமென நாடு முழுவதும் மௌனமாக மனமுருகிக் கொண்டிருக்கிறது.

போரிடும் ஒருவனுக்கு தாம் ஏன் போர் புரிகின்றேன் என்ற ... தோன்றியுள்ளது.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பூவா தலையா போடப்படும் இறுதிநேரம் வரை அணியில் யார் யார் விளையாடுகின்றனர் என்று முடிவெடுக்காமல் இருப்பதுபோல் இராணுவக் கட்டமைப்பில் செய்யப்படும் மாற்றங்களும் இறுதிநேரம் வரை இழுபடுகின்றன.

அண்மையில் இராணுவ

உள்விவகாரம் என்பதை மறந்து ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சினுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றன.

கெடுபிடிப் போர் முடிந்து, சோவியத் ரஷ்யா 15 நாடுகளாகத் துண்டாடப்பட்டபோதும், ரஷ்யா குறிப்பிடக் கூடிய இராணுவ பலம் கொண்ட நாடாகவும், அணுவாற்றல் பெற்ற நாடாகவுமே இருந்து வருகின்றது. அதாவது, உலகில் அமெரிக்காவிற்கு அடுத்த அணுவாற்றல் பெற்ற வல்லரசாக ரஷ்யாவே தற்பொழுதும் உள்ளது.

மேலும், கெடுபிடிப் போரின் பின் 'மேற்குலகின் விருப்பத்திற்குரியவர்' ஜனாதிபதியாக வந்துள்ளபோதும், பாராளுமன்றத்திலும், பிராந்தியங்களிலும்; முன்னாள் கம்யூனிஸ்ட்கட்சியின் செல்வாக்கு கணிசமான அளவில் உள்ளது. இந்நிலையானது, மேற்குலகிற்கு விருப்பிற்குரியதாக இல்லை. மீண்டும் ரஷ்யா கம்யூனிஸ்ட்டுக்களின் கையில் விழுந்து விடுமோ என்ற அச்சம் அவர்களிடம் உண்டு.

இதற்கு, சாதகமான நிலைகளும் இல்லாமல் இல்லை. அதாவது, கம்யூனிஸ் - கட்சியின் பிடியில் இருந்து விடுபட்டு ஜனநாயகம், திறந்த பொருளாதார அமைப்பு என ரஷ்யா செல்ல முற்பட்டபோதும் அதன் பிரச்சினைகள் எதுவும் தீரவில்லை. மாறாக, பொருளாதார நெருக்கடியும், சமூகச் சீர்கேடுகளுமே அதிகரித்தன. வேலையிலாத் திண்டாட்டம் பன்னிரண்டு வயது பதின்மூன்று வயதுச் சிறுமியரையே விபச்சாரம் செய்யும் அளவிற்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது.

இந்நிலையில், சோவியத் யூனியனின் சிதைவு மட்டுமல்ல, ரஷ்யாவின் சிதைவும் மேற்குலகிற்கு அவசியமானதாகவே மாறியுள்ளது. இதன் காரணமாகத்தான், தற்பொழுது ரஷ்யாவில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியை தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள மேற்குலகம் முற்படுகின்றது. அதாவது, நெருக்கடியைச் சாதகமாக்கி ரஷ்யாவில் உள்நாட்டுப் போரை ஏற்படுத்தி விடுவதன் மூலம் ரஷ்யாவை மேலும் பலவீனமடையச் செய்து, மீளமுடியாத பிரச்சினையில் சிக்க வைக்க மேற்குலக நாடுகள் விரும்புகின்றன. அவ்வாறு இல்லாதவிடத்து ரஷ்யாவின் உள்நாட்டுப் பிரச்சினையில் வரிந்து கட்டிக் கொண்டு இவை யெல்ட்சினை ஆதரிக்க வேண்டிய அவசியமில்லை.

இதேவேளை இறந்தவர் சூசை அன்ரனி பெர்னாண்டோ (வயது 59) என்பவரெனவும் இவர் ஒரு அங்கவீனர் என்றும் லவனிதா குடியிருப்பில் உள்ள ஐயனார் முகாமில் வசித்து வந்ததாகவும் நேற்று முன்தினம் தனது ஓய்வூதிய விடயமாக யாழ்ப்பாணம் அரிச்சுனா வீதி (ஸ்ரான்லிவீதி)யில் உள்ள மக்கள் வங்கிக்கு செல்வதற்காக வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றதாக மாதர் சங்க அதிபர் ஏ. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒக்டோபர் மாதத்திற்கான ஒய்வூதிய வவுச்சர்கள் வாதுவ கப்பலில் ஏற்றி வரப்படுவதாகவும் வாதுவ கப்பல் இன்னார இறுதிக்குள் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

[ச], [தி]

# மட்டு. கோட்டைக்குள் பொலிஸ் நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கச்சேரி தற்போது இயங்கும் டச்சு கோட்டைக்குள் மட்டுநகர் பொலிஸ் நிலையமும் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகமும் விரைவில் மாற்றப்படவுள்ளன. கடந்த வாரம் பொலிஸ் உயரதிகாரிகள் டச்சு கோட்டைக்கு சென்று கட்டடத்தை பார்வையிட்டது தற்போது பொலிஸ் நிலையம் நீதிமன்றக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பயிற்சி பெற்று வெளியேறினர்

(யாழ்ப்பாணம்)

சுகாதார பரிசோதகர் சேவைக்கான பயிற்சியைப் பெற்று இரு அணிகள் வெளியேறியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது

சுமார் 33 பேர் அடங்கிய இவ் இரு குழுக்களும் தமது கடமைகளை அவ்வப் பிராந்திய சுகாதார பிரிவுகளில் மேற்கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (தி)

## வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா

சரித்திரப் பிரசித்திபெற்ற விஷ்ணு ஆலயமான ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய இரதோற்சவம் 29-ம் திகதி புதன்கிழமை காலை நடைபெறுகின்றது. மறு நாள் கடல் தீர்த்தமும் வெள்ளிக்கிழமை கேணித் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (25)

## கலந்துரையாடல்

செம்பியன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வடமராட்சிக் கிளை திறப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 30 மணியளவில் அல்வாய் கிழக்கு சதா பொன்ஸ் முகவரியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. உறுப்பினர் அனைவரையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## மக்கள் வங்கிக் கிளை இடம் மாறியது

மக்கள் வங்கி நவீனசந்தைக் கிளை இம்மாதம் 20ஆந் திகதி தொடக்கம் முழுமையாக யாழ். பல்கலைக் கழக வளாகத்தின் வட பகுதியில் அமைந்திருக்கின்ற கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

இக்கிளை வளாகத்தின் வடபகுதியில் தபால் பெட்டி ஒழுங்கையில் அமைந்திருக்கின்றது வாடிக்கையாளர்கள் பலாலி வீதியிலிருந்து தபால் பெட்டி ஒழுங்கை மூலமாக வங்கியை வந்தடையலாம் என்றும் வங்கி விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...இறுதியாட்டத்தில் நொதேணிவிளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மஞ்சவனப்பதி விளையாட்டுக் கழக அணி மோதுகின்றது. மாலை நான்குமணிக்கு இப்போட்டி ஆரம்பமாகும். இதைத்தொடர்ந்து மின்னொளியில் பெண்கள் அணி மோதும் காட்சிக் கரபந்தாட்டப் போட்டியில் சென் அன்ரனிஸ் வி. கழக அணியை எதிர்த்து பாரதி வி.கழக அணி மோதும். தொடர்ந்து கரபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கே. கே. எஸ். வி. கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் வி. கழக அணி விளையாடும்.

## குருபூசையும் அன்னதானமும்

கடையிற்சுவாமிகளின் நாற்பத்திரண்டாவது குருபூசையும், அன்னதானமும் இன்று கடையிற்சுவாமிகள் சமாதிச் சிவாலயத்தில் நடைபெறவுள்ளன. காலை பத்து மணியளவில் விசேட அபிஷேகம் ஆராதனைகளுடன் நண்பகல் பன்னிரண்டு மணியளவில் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளன.

# கராட்டிப் போட்டி

ஒக்டோபர் 2ஆம், 3ஆம் திகதிகளில் நடைபெற இருந்த கராட்டி போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

வயது. நிறை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு வகுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டு யாழ்மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி போட்டிகளுக்கு மாவட்டத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் ஏறத்தாழ 300 வீரர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

போட்டி இடம் புதிய திகதி என்பன பின்னர் அறியத்தரப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

...என போராடுகின்றேன் என்ற தெளிவான சிந்தனை வேண்டும், தனது இலக்கு என்ன என்பது தெரியவேண்டும். வெறுமனே வடக்கு கிழக்கை ''சுற்றிவளைப்பதன் மூலம்'' அரசியல் தீர்வுகாணலாம் என்பது ஒரு பிரசாரக் கூற்றாகும். இராணுவக் கட்டமைப்பில் அடிக்கடி மாற்றம் செய்யப்படுவது எல்லோர் மனங்களிலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் ''யார் இந்த போரை முன்நடத்துகிறார்?'' என்ற குழப்பம்

## வங்காலையில்

இதன் ரவைக்கூடுகள் - 04, தன்னியக்க ரவைகள் 120, கோல்சர் - 01 ஆகிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இரண்டாவது சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது விமானப்படையின் உதவியுடன் வெளியேறி வந்த இராணுவத்தினர் மீது விடுதலை புலிகள் தாக்குதல் மேற்கொண்ட போதே இம்மோதல் இடம்பெற்றது.

வங்காலை இராணுவ முகாமில் இருந்து விமானப்படையின் உதவியுடன் அவ்ரோ எறிகணைவீச்சு நடத்தியவாறு வெளியேறி வந்த இராணுவத்தினர் மீதே விடுதலைப்புலிகள் தாக்குதலை நடத்தினர்.

அவ்ரோ விமானக் குண்டு வீச்சிற்கும் எறிகணை வீச்சிற்கும் இடையில் இடம் பெற்ற மோதலின் போதே ஐந்து படையினர் கொல்லப்பட்டனர், ஒருவர் படுகாயமடைந்தார்.

இதேவேளை மன்னாரில் புதிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவறிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் செயல்பாட்டுத் தலைமையகம் இதில் ஐந்து படைகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தது.

மேலும் அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவ நடவடிக்கை தொடர்வதாகவும் அறிவித்தது.

...அதிகாரியொருவரை சந்தித்து போரின் முன்னேற்றம் குறித்து கேட்டேன் அதற்கு அவர் நாம் உயிருக்காக போராடுகிறோம் என்றார். உயிருக்காக போராடுவது என்று அவர் கூறுவது படைகள் மத்தியில் நம்பிக்கையின்மை நிலவுவதே காட்டுகிறது. நாட்டுக்காக போராடுகிறேன் என்று அவர் கூறியிருந்தால் அவரின் மனோநிலை உயர்ந்த நிலையில் இருப்பதுடன் போரிலும் வெற்றியீட்டவேண்டும் என்ற ஆர்வமும் அவருக்கு இருக்கின்றது என்பதை நாம் அறிந்திருக்க முடியும். எனவே இந்நிலை உருவாக வேண்டுமானால் தேசிய நிலையில் ஓர் அரசியல் திட்டம் ஒன்று முன்வைக்கப்படவேண்டும்.

புதிதாக 10 பட்டாலியன்களை இராணுவத்தில் சேர்த்துக்கொண்டுள்ளோம் ஆனால் இவர்களுக்கு பயிற்சியளிக்கவென ஓர் அமைப்புவேண்டும் ஆனால் இக் கட்டுமானத்தை நாம் எங்கிருந்து பெறுவது? இப்போது இராணுவத்திற்கு ஏற்படும் அழிவு விகிதத்தை பார்த்தால் இப்போதுள்ள அணிகள்பலவீனமான நிலையிலேயே உள்ளன. பலவீனமான இந்த முன்னைய அணிகள் எவ்வாறு புதிய அணிகளான 10 ஆயிரம் பேருக்கு பயிற்றுவிக்க ஆவணியை வழங்கமுடியும்? என்றும் பிரிகேடியர் நாரத விக்கிரமரத்ன தனது கட்டுரையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

## எறிகணை

பில் கூடி நின்ற படகோட்டிகள் மீது கலியர் தாக்குதலை நடத்தியதாக தெரியவருகின்றது. எனினும் சேதவிபரம் தெரியவில்லை அதேவேளை நேற்றுக் காலை 10. 00 மணியளவில் பூநகரி முகாம் பகுதிகளில் ஷெல் தாக்குதல் இடம் பெற்றுவருகின்றது. இதன் சேதவிபரமும் தெரியவில்லை,

(86)

நடமாடும் வர்த்தகர்களே!

உங்கள் பொருள்களை
சந்தைப்படுத்த எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

‘எழிலகம்’

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(இ-7503)

மலிவு விற்பனை

பல பொருள்கள் மலிவு விலையில்
ரூபா 500/= ற்கு மேற்பட்ட கொள்வனவாளர்களிற்கு
இலவச பரிசு சிட்டைகள்
அன்பளிப்புகளிற்கு புதுமை வழி அன்பளிப்பு மடல்கள்
எழிலகம்

மணிக்கூட்டு வீதி, (7504) யாழ்ப்பாணம்.

யாழ். பல்கலைக் கழகத்திற்கு

# வெட்டுப்புள்ளியை குறைத்து அனுமதி வழங்க கோரிக்கை

(நமது நிருபர்)

1993ஆம், 1994ஆம் ஆண்டுகளில் பல்கலைக் கழகங்களிற்கு யாழ் மாவட்டத்தில் இருந்து அனுமதிக்கப்படும் மாணவர்களின் வெட்டுப் புள்ளியை குறைத்து அனுமதிக்கும் படி பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக் குழுவிற்கு மகஜர் ஒன்றின் மூலம் கோரிக்கை ஒன்று விடுக்கப்படவுள்ளது.

இக்கோரிக்கை அடங்கிய மகஜரை கல்வி அதிகாரிகள், உயர் கல்வி அதிகாரிகள், அதிபர், ஆசிரியர், பெற்றோர் மற்றும் கல்வியில் நாட்டமுள்ளோர் இணைந்து அனுப்பி வைக்க முடிவு செய்துள்ளனர்.

இம் மகஜரில் 1993 ஆம், 1994ஆம் ஆண்டுகளில் யாழ். மாவட்டத்தில் இருந்து பல்கலைக் கழகங்களிற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை சென்ற முறைகளில் அனுமதித்த அளவான மாணவர்களை அனுமதிக்கும் படியாக வெட்டுப் புள்ளியை குறைத்து அனுமதிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படவுள்ளது.

இதற்கான காரணங்களாக தற்சமயம் யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் இராணுவத் தாக்குதல்கள், மாணவர்களின் இடம்பெயர்வுகள், பாடசாலைகளில் இடநெருக்கடி, திறமையான ஆசிரியர்கள் கொழும்பிற்குப் புலம் பெயர்தல், எரிபொருள் கிடைக்காமை, இடம்பெயர்ந்து மாணவர்கள் முகாம்களில் படும் கஷ்டங்கள் என்கின்ற காரணங்களினால் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

[பா]

## மன்னார் மாவட்டத்தில் திலீபன் நினைவு நிகழ்வு

தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் மன்னார் வட்ட பகுதிகளின் அனைத்து இடங்களிலும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அன்றையதினம் திலீபன் நினைவாக உண்ணா விரதமும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன நானாட்டான் வட்டத்தில் வட்டப் பொறுப்பாளர் திலகன் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கணேஸ் உரை நிகழ்த்தினார்.

மக்களுக்கா விடுதலைப்புலிகள் எவ்வேளையிலும் தமது உயிரைக் கொடுக்கத் தயாராகவுள்ளனர் என நானாட்டான் வட்டத்தில் வட்டப் பொறுப்பாளர் திரு. திலகன் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக்கூட்டத்தில் உரையாற்றிய மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கணேஸ் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எந்தவொரு இராணுவ நடவடிக்கையாலும் புலிகளையும், புலிகளின் போராட்டத்தையும் அழிக்க முடியாது என்பதை உணர்ந்த தென்பகுதி அரசியல் வாதிகள் வீண் வாதம் பேசுகின்றனர் எனவே எமது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றார்.

### திருமலை

நடைபெற்றதுடன் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான அறிவுக் களஞ்சியப் போட்டி, கவிதைப் போட்டி ஆகியனவும் நடைபெற்றன.

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் அளிக்கும்

நிதி உதவி

கலை நிகழ்ச்சிகள்

இடம்: யாழ். இந்துக் கல்லூரி காலம்: 16-10-93 நேரம்: இரவு 6-00 மணி

நிகழ்ச்சிகள்

1. பருத்திநகர் சாண்டோ எம். துரைரெத்தினம் அவர்களினால் நடாத்தப்படும் “வீரதீரச் செயல்கள்” முதல் முறையாக யாழ் நகரில் அரங்கேறவுள்ளது.
   (அ) நெருப்பு புதைகுழியில் சில மணி நேரம் படுத்திருத்தல்.
   (ஆ) இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
   (இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்.
   (ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்தல்
   (உ) 35 கிலோ எடையுள்ள இரும்புக்குண்டினை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்.
   (ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின் மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
   (எ) இன்னும் பல வீரதீரச் செயல்கள்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



கப்டன் விக்ரம்
(செல்லத்துரை உதயக்குமார்)

மலர்வு 10-02-1972 வீரச்சாவு 22-09-1991

கொட்டும் முரசொலியும் கோலக்குயில்
மொழியும் விட்டுப் பிரிந்தனையோ
மணலாறுப் போரில் மாண்டுவிட்ட மாவீரனே!

ஆவத்தடி, மிருசுவில் (6100) -குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி பா. ஸ்ரீ மகாயோகேஸ்வரி

டாக்டர் N. பாலகிருஸ்ணனின் (ஆவரங்கால்) மனைவியும் P. பிறேம் ஆனந்தின் (1-ம் வருடம் லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி) தாயாருமாகிய திருமதி பா. ஸ்ரீ மகா யோகேஸ்வரி அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியையும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்
லங்கா சித்த ஆயுள்வேத
மருத்துவக் கல்லூரி

(6118)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை பொன்னம்மா

அளவெட்டி வடக்கு முருக்கடியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்னம்மா 27-09-93 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், கணேசமூர்த்தி, தனலட்சுமி, சுப்பிரமணியம் [தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சுன்னாகம்], கிருஷ்ணமூர்த்தி [அ. ம. ப. நோ. சங்கம்], சிவலிங்கம் [மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை, கன்னாதிட்டி], கனகரத்தினம் [சவுதி அரேபியா], மங்களேஸ்வரி ஆகியோ

2. மோகன் மாஸ்டர் அவர்களினால் நடாத்தப்படும் கராட்டி விளையாட்டுக்கள்.
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் நாடகம்.

அனைத்து தமிழ் ப வர்த்தகர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி.

(இ-7493) வ. யா. ஆ. ம. வ. சங்கம்

St. Patrick's College, Jaffna
Jaffna

# அனுமதி விண்ணப்பம்-1994

பின்வரும் வகுப்புக்களுக்கு மட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் ஆண்டு:- 01-02-88-31-01-1989 க்குள்பிறந்திருக்க வேண்டும்.
நான்காம் ஆண்டு:- 1985 இல் பிறந்திருக்க வேண்டும்.
ஆறாம் ஆண்டு:- 1983 இல் பிறந்திருக்க வேண்டும்.
ஒன்பதாம் ஆண்டு:- 1980 இல் பிறந்திருக்க வேண்டும்.

★ விண்ணப்பப்பத்திரம் ரூபா 100 00(பரீட்சைக் கட்டணம்உட்பட)01-10-93 தொடக்கம் 22-10-93 வரை பாடசாலை நேரங்களில் காலை 9-00-1-00 வரை கல்லூரி காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 26-10-1993 ஆம் திகதிக்கு முன் கல்லூரி காரியாலயத்தில் காலை 9-00—12-00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ அனுமதிப் பரீட்சைத்தினம் 06-11-1993 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

| ஆண்டு | சமுகம் தரவேண்டிய நேரம் (காலை) | பரீட்சை ஆரம்பம் (காலை) |
|---|---|---|
| 9 | 8-00 | 8-30 |
| 6 | 8-00 | 8 30 |
| 4 | 8-00 | 8 30 |
| 1 [இல: 01-100] | 8-00 | 8-30 |
| 1 [இல: 101-250] | 10-30 | 11-00 |

★ 6 ஆம், 9 ஆம் வகுப்புக்களுக்கு நடாத்தப்படும் அனுமதிப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் 10o/o மாணவர்களுக்கு வழமைபோல் யாழ். ஆயரது புலமைப்பரிசில் வழங்கப்படும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ/7506) கல்லூரி அதிபர்

### வடமராட்சி

இக்கடற்பரப்பிற்கு வந்த 'விரயா' என்ற படகு குடியிருப்புக்கள் மீது தாக்குதலை தொடுத்தது. அநேகமான பீரங்கிக் குண்டுகள் மயிலியந்தனை, காட்டுப்புலம், வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடி பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட போதிலும் அவை வெளிப் பகுதிகளிலும் கடல் பகுதிகளிலும் விழுந்து வெடித்தன. இச் சம்பவத்தின்போது பாதுகாப்புத்தேடி ஓடிய சிறுவன் ஒருவன் தலையில் காயமடைந்தார். இவர் வல்வெட்டித்துறை அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார். நேற்றும் அதிகாலை 5-30மணியளவில் எதிர் எதிராகரோந்து வந்த இரண்டு கடற்படைப் படகுகள் பருத்தித்துறையில் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டன. அநேகமான பீரங்கிக் குண்டுகள் துறைமுகத்தை நோக்கி ஏவப்பட்டன. இவை துறைமுகத்திற்கு அண்மித்த பகுதிகளில் விழுந்து வெடித்தன. (யோ)

### கதிர் வீச்சு

இலங்கையில் உள்ள குழந்தைகள் உட்கொள்வதே இங்கு குழந்தைகளுக்கான புற்று நோய் தற்போது அதிகரித்து வருவதற்கான காரணம் என வைத்திய நிபுணர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பங்களாதேஷ் அரசு நிராகரித்துவிட்ட குழந்தைகள் பால்மாதொகுதி லிதுவேனியாவில் தயாரிக்கப்பட்டு நெதலாந்தில் பொதி செய்யப்பட்டது என்று கூறப்படுகிறது.

வேண்டும் என்றார்.

### வினாத்தான்

கொழும்பில் வைத்து திருத்தப்பட்டமையால் போக்குவரத்துக் காரணங்களைக் காரணம் காட்டி தமிழ் உத்தியோகத்தர்கள் விடைத்தாள் திருத்த வேலைகளுக்கு செல்லவில்லை. இதனாலேயே மேற்படி நிலைமை உருவானதாக கூறப்படுகிறது.

### தமிழீழ

பேரும் தோற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது இன்று ஆரம்பமாகும் மேற்படி பரீட்சை எதிர்வரும் நாலாம் திகதியுடன் முடிவடையும்.

இதேவேளை மேற்படி பொதுக் கல்வித் தேர்வு பரீட்சைக்கு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நேர அட்டவணையில் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த பரீட்சை 3-10-93 ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்படி செவ்வாய் காலை 8 30ற்கு நடைபெறவிருந்த பரீட்சை ஞாயிறு காலை 9.30ற்கும் செவ்வாய் நண்பகல் 1 மணிக்கு நடைபெறவிருந்த பரீட்சை ஞாயிறு நண்பகல 1.30ற்கும் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபம் II இல் தோற்றும் மாணவர்களின் தேர்வு நிலையம் மட்டுவில் மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 27-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11045

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-1019, 42-0962, 43-2524, 27-8959, 26-3390, 26-9658, 22-2250, 26-3321, 26-6678, 28-9186, 42-3815, 26-7627, 42-2432, 27-5406, 28-1311, 24-1172, 27-7039, 26-4657, 24-6348, 26-2366,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

43-3576, 24-0422, 40-1617, 27-9833, 24-5774, 24-6280, 26-2421, 41-1531, 26-7546, 24-5461, 27-7711.

[மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை, கன்னாதிட்டி], கனகரத்தினம் [சவுதி அரேபியா], மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரஞ்சோதியின் சிறியதாயாரும், கனகலிங்கம் [பிரபலவர்த்தகர் அளவெட்டி], சிறீகதிர்காம சம்பந்தர் [அதிபர் சென் மேரிஸ் மகா வித்தியாலயம் அவிசாவளை], சுந்தரலிங்கம் [சட்டக்கல்லூரிகொழும்பு], சிவபாக்கியம், கலாதேவி, கலைச்செல்வி, அருட்செல்வி ஆகியோரின் அன்புமாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-09-93 செவ்வாய்க்கிழமை இன்று பகல் 12 00 மணிக்கு சண்டிலிப்பாய் வட்டச்செயலகத்திற்கு அருகில் உள்ள செ. சிதம்பரநாதனின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் விளாவெளி கள்ளியடைப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
அளவெட்டி வடக்கு. வே. சுப்பிரமணியம்
(6121) -மணியண்ணை- (மகன்)

## தம்பையா சதாசிவம்

[ஓய்வு பெற்ற அதிபர்]

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பையா சதாசிவம் (ஓய்வு பெற்ற அதிபர்) கடந்த திங்களன்று கொழும்புத்துறையில் காலமானார்.

இவர் திருமதி தெய்வானைப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் சுமதியின் அருமைத் தந்தையாரும், பேரம்பலம், காலம் சென்ற பரமநாதன், காலம் சென்ற பூரணம் அவர்களின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 28-09-93 மாலை 3.00 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
24, புங்கங்குளம் வீதி, திருமதி சதாசிவம்
கொழும்புத்துறை. [6123] (மனைவி)

திருமதி

## செல்லமுத்து இலட்சுமி

சங்கானையைச் சேர்ந்த திருமதி செல்லமுத்து இலட்சுமி 27. 9 93ல் காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற செல்வரத்தினத்தின் தாயாரும், திருமதி செல்வரத்தினத்தின் மாமியாரும், தயாபரன் (லண்டன்), சுசிலாதேவி (லண்டன்), ரஞ்சனாதேவி [நோர்வே], பத்மாதேவி (சுவீடன்), குகநேசன் (லண்டன்), சிறிதேவி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று 28. 9. 93 10.00 மணிக்கு சங்கானை விளாவெளிமயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
காளி கோவிலடி, திருமதி செல்வரத்தினம்
சங்கானை. (மருமகள்)
[6125]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது